1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது 1970-71-ல் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்டசோழபுரம் இந்த 3 இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல். வரைபடங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன, தயாரானதும் கட்டடங்கள் தொடங்கும். அதற்குரிய தொடராச் செலவு ரூ. 2,15,000, தொடரும் செலவு ரூ. 1,21,000 ஆகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

* 300 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18—12—1971 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த கலெக்டர்களுடைய மாநாட்டில், யுத்தம் நடந்த காரணத்தினுல், அந்த யுத்த காலத்திலே என்ன செய்வது, எந்தமாதிரி கமிட்டி அமைப்பது என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது அந்த மாவட்ட ரீதியான கமிட்டிகள் செயல்படுகின்றனவா, செயல்படவில்லையா? செயல்படுகிறது என்று சொன்னல் எம்மாதிரி செயல்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது கமிட்டிகள் இருக்கின்றன, கலைக்கப்படவில்லை. ஆனல் செயலற்றிருக்கின்றன.

சென்னை நகரிலுள்ள சாலைகள்

* 301 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எந்தெந்த சாலைகள் அண்மையில் அகலப்படுத்தப்பட்டன?

---

* 389–390-ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) அப்பொழுது சாலை ஓரங்களில் அப்புறப்படுத்தப்பட்ட நிழல் தரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை வளர்க்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) விரிவுபடுத்தப்பட்ட சாலைகளின் பட்டியல் @ ஒன்று அவையின் முன் வைக்கப்படுகின்றது.

(இ) அப்புறப்படுத்தப்பட்ட நிழல் தரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள், புதை வடிகால்கள். மேனிலைக் கம்பிகள் போன்ற தடைகள் இல்லாத இடங்களிலும், விரிவான உள்ள நடையோரப் பாதைகளிலும் நடப்பட்டு வருகின்றன.

திரு. என் கிட்டப்பா : தலைவர் அவர்களே, அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க—
நிழல்தரும் மரங்களெல்லாம் தமிழ்நாட்டின் சாலை ஓரங்களில் இருந்த நிலைமாறி, இப்பொழுது இருக்கின்ற மரங்களையும் வெட்டுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறதே, இதனைத் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க . . . மரங்கள் வைக்கப்பட்டன. இப்பொழுது கார்கள் எல்லாம் போவதற்கு வழிகள் செய்யவேண்டிய காரணத்தினால் இந்த மரங்களை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற சூழ்நிலையும் இருக்கிறது. இல்லாவிட்டால் சென்னை நகரப் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க முடியாது. பிற்காலத்தில் சாலைகள் இவ்வளவு அகலம் ஆகும் என்று எண்ணாத காலத்தில் மரங்கள் வைக்கப்பட்டன. கூடுமான வரையில் இந்த மரங்கள் அகற்றப்படக் கூடாது என்ற எண்ணத்தை வைத்துதான் அகற்றப்படாமல் இருக்கின்றன. இருப்பினும் சில இன்றியமையாத நேரங்களில் மரங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. தேவையான இடங்களில், மரங்கள் வைக்கப்படுகின்றன. அதைக் கவனத்தில் கொண்டுதான் ராஜ் பவன் சாலையில் இருமருங்கிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் எதும் இல்லாததால், அங்கே 30 நிழல் தரும் மரங்கள் நடப்பட்டிருக்

@ 391-394-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கின்றன. 40 மரங்கள் எட்வர்டு எலியட்ஸ் சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. 6 மரங்கள் ஆற்காடு சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ. அங்கங்கு மரங்கள் நடப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பெர்லின் போன்ற பெரிய நகரங்களில் சாலைகள் இருக்கின்றன. அவற்றை 4 பகுதிகளாக பிரித்து, அதிகமான மரங்கள் நடப்பட்டு, இன்றைக்கும் இருக்கிறதே, அதேமாதிரி அண்ணா சாலை போன்ற இடங்களிலே ஏற்கெனவே இருக்கிற மரங்களையாவது வெட்டாமல் இருப்பதற்கும் முடிந்த இடங்களிலெல்லாம் மரங்களை வைப்பதற்கும் அரசு தனியாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதியான இடங்களில் மரங்கள் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை இப்பொழுது மாநகராட்சி மன்றம் கொண்டிருக்கிறது. மாநகராட்சி மன்றத்திற்கு ஒரு யோசனையும் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, சிறு கன்றுகளாக வைத்துத் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதைவிட, ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, அல்லது பண்ணையிலோ, அல்லது தோட்டத்திலோ, 8 அடி, 10 அடி, 15 அடி உயரம் மரங்களை வளர்த்து விட்டபிறகு, அவற்றை வேரோடு பறித்துக்கொண்டுவந்து இந்தச் சாலைகளின் ஓரங்களில் நடுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, நல்லும் இருப்பதால், அவற்றை வேரோடு கொண்டுவந்து வைப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது.

Ambasamudram market.

* 302 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that it has been pointed out in the Audit Report that the President of the Ambasamudram Town Panchayat had not paid the licence fee of Rs. 1,050 for 1967–68 towards the market building owned by him and that the amount should be realised from him: and

(b) if so, the action taken thereon?